விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

ரா
ம்
கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 12 செவ்வாய்க்கிழமை (26.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 189

# நோர்வே வெளிவிவகார அமைச்சின் முன்னால் நோர்வேத் தமிழர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

## இணைத் தலைமை நாடுகளின் மென்போக்குக்கு எதிராக

(ஒஸ்லோ)

இணைத்தலைமை நாடுகளின் மென்போக்குக்கு எதிராக நோர்வேத் தமிழர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். இப் போராட்டத்தின் இறுதியில் இலங்கையின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரிடம் இணைத்தலைமை நாடுகளுக்கான கோரிக்கை மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (06 ஆம் பக்கம் பார்க்க)




# இணைத்தலைமைகள் நேற்று கூடின இன்று முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் நோர்வேயில் ஒஸ்லோ நகரில் இலங்கை நேரப்படி நேற்று மாலை 6.30 மணியளவில் கூடினார்.

இவர்கள் இன்று கலந்துரையாடல்களை நடாத்தவுள்ளதாகவும்,இக் கலந்துரையாடலில் இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளிடையே சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குள்ள சந்தர்ப்பங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இந் நிலையில் ஒவ்வொரு தரப்பிலுமுள்ள தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காக இணைத்தலைமை நாடுகள் இச் சந்திப்பினை மேற்கொள்வதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் அமெரிக்காவின் துணை இராஜாங்க செயலாளர் றிச்சட் (06 ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிகல பகுதியில் வாகனங்கள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு தொப்பிகலப் பகுதியில் இருந்து நேற்று பாதுகாப்புத் தரப்பினர் எரியூட்டப்பட்ட நிலையில் பல வாகனங்களை கைப்பற்றியுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் போது 16 மோட்டார் சைக்கிள்கள், 8 டபிள் கப் ரக வாகனங்கள் மற்றும் லொறிகள் என்பன பாதுகாப்பு தரப்பினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# முன்னாள் ரெலோ உறுப்பினருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு

## திருவெண்ணாமலை நீதிமன்றம் விதித்தது

(சென்னை)

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முன்னாள் உறுப்பினரும் மயிலிட்டியைச் சேர்ந்தவருமான ராஜன் என்பவருக்கு திருவெண்ணாமலை மாவட்டத்தில் 1988ஆம் றின்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டுமென்று திருவெண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிபதி சந்திரசேகரன் நேற்று தீர்ப்பளித்தார்.

1988ஆம் ஆண்டு யூலை மாதத்தில்

# அரசாங்கத்துடன் இணைவதற்கு 11 ஐ.தே.க.எம்.பிக்கள் யோசனை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் மேலும் சிலர் அரசாங்கத்துடன் இணைவது குறித்து கலந்தாலோசித்து வருவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.விவசாய அமைச்சில் நேற்று பகல் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இக் கருத்தினை கூறியுள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு பிரதேசங்களில்

நடாத்தவுள்ளதாகவும்,இக் கலந்துரையாட

தோல்வியடைந்தது. இந் நிலையில் ஓவ

# முன்னாள் ரெலோ உறுப்பினருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு

## திருவெண்ணாமலை நீதிமன்றம் விதித்தது

(சென்னை)

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முன்னாள் உறுப்பினரும் மயிலிட்டியைச் சேர்ந்தவருமான ராஜன் என்பவருக்கு திருவெண்ணாமலை மாவட்டத்தில் 1988ஆம் ஆண்டு நடைபெற்ற கொலை மற்றும் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த மோகன் மற்றும் சேகர் ஆகியோர் 7ஆயுள் தண்டனைகளை ஒன்றின்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டுமென்று திருவெண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிபதி சந்திரசேகரன் நேற்று தீர்ப்பளித்தார்.

1988ஆம் ஆண்டு யூலை மாதத்தில் திருவெண்ணாமலையை அடுத்து ரெட்டியார் பாளயம் என்ற கிராமத்தின் பித்தயக்கார கவுண்டர் என்பவரது வீட்டில் புகுந்து அங்கிருந்தவர்களை தாக்கி 21 ஆயிரத்து 800 ரூபா ரொக்கப்பணத்தை எடுத்துக் கொண்டு ஒரு வானில் தப்பியோடிய (06 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்துடன் இணைவதற்கு 11 ஐ.தே.க.எம்.பிக்கள் யோசனை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் மேலும் சிலர் அரசாங்கத்துடன் இணைவது குறித்து கலந்தாலோசித்து வருவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.விவசாய அமைச்சில் நேற்று பகல் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இக் கருத்தினை கூறியுள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு பிரதேசங்களில் புதிய பொலிஸ் நிலையங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து தற்போது இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே வாகரை மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பிரதேசங்களுக்கான பொலிஸ் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் நேற்று வவுணதீவுப் பிரதேசத்திற்கான பொலிஸ் நிலையம் பிரதேச சபைக் கட்டடத்தில் கிழக்குப் பிராந்திய படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டியவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு உரையாற்றிய கிழக்குப் பிராந்திய மத்திய பிரிவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த ஜயசிங்க;

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள பிரதேசங்கள் ஆயித் தியமலை மற்றும் கரடியனாறு ஆகிய இடங் களிலும் புதிதாக இரண்டு பொலிஸ் நிலை யங்களும், 20 பொலிஸ் காவல் நிலைகளும் திறப்ப தற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (சு)

# எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கும்!

(கொழும்பு)

இலங்கையில் எண்ணெய் எரிபொருட்களின் விலை உயரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.இது தொடர்பான இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் தலைவர் அசந்த டி மெல் கூறியுள்ளதாவது,

எண்ணெய் எரிபொருட்களின் விலையை உயர்த்த வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.சர்வதேச சந்தையில் எண்ணெய் எரிபொருட்களின் விலை மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரே வாரத்தில் 34 பேர் கிழக்கில் கடத்தப்பட்டனர்

## கண்காணிப்புக்குழு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஒரே வாரத்தில் 34 பேர் கடத்தப்பட்டுள்ளதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்காணிப்புக்குழுவின் யூன் 11-17 ஆம் வார அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.திருகோணமலை மாவட்டத்தில் 03, அம்பாறை 14, மட்டக்களப்பு 17 பேர் கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் 25 பேர் கூடுதலாக கடத்தப்பட்டுள்ளனர். இந்த வாரத்தில் ஆறு பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். (06 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை திரும்ப முயற்சித்த 21 பேர் தமிழ் நாட்டில் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு திரும்பிச் செல்ல முயன்ற 21 அகதிகளை நேற்று முன்தினம் அதிகாலை உச்சிப்புளி பொலிஸார் தமிழக சுங்கத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இராமநாதபுர மாவட்ட கடலோரப் பகுதியில் கடத்தல்,அந்நியர் ஊடுருவலை தடுக்க சுங்கத்துறையினர் தீவிர சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந் நிலையில் மண்டபம் பகுதி சுங்கத் துறையினர் கடலோரப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை பணியில் ஈடுபட்டிருந்தபோது உச்சிப்புளி அருகே உள்ள சாத்தகோன்வலசை கடற்கரைப் பகுதியில் (06 ஆம் பக்கம் பார்க்க)

# 'எம்' இல் தொடங்கும் எந்தக்கட்சியும் அதிக காலம் நீடித்தது இல்லை

(கொழும்பு)

இலங்கையில் 'எம்' என்ற பெயரில் தொடங்கப்பட்ட எந்த ஒரு கட்சியும் நீடித்தது இல்லை என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கருத்துத் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறியுள்ளதாவது;

அநுரா பண்டார நாயக்காவினால் சுதந்திரக்கட்சியில் மைத்திரி அணி முன்னர் உருவாக்கப்பட்டது.சந்திரிகாவினால் மகாஜன அணி உருவானது. ஆனால் நீடிக்கவில்லை. அந்த நிலை தான் (06 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை ஆயுதக் கொள்வனவுக் குழு ரஷ்யாவிலிருந்து இலங்கை திரும்பியது

(கொழும்பு)

லங்கா லொஜிஸ்டிக்ஸ் எனும் ஆயுதக் கொள்வனவு நிறுவனத்தின் குழுவினர் விமானங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான ரஷ்யா மற்றும் உக்ரேன் பயணத்தை முடித்து இலங்கை திரும்பியுள்ளனர்.

லங்கா லொஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜயந்த விக்கிரமசிங்க, ஏயர்லைன்ஸ் வைஸ் மார்சல் பிரசந்த டி சில்வா, வான்படை பொறியியலாளர் பிளைட் லெப்.ஏக்கநாயக்க ஆகியோர் அடங்கிய குழு அண்மையில் ரஷ்யா சென்றிருந்தது.

இக் குழுவின் பயண ஏற்பாடுகளை ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க செய்திருந்தார். உலன் உதேவில் உள்ள மிக்-29 விமான உற்பத்தித் தொழிற்சாலையைப் பார்வையிட்ட இலங்கைக் குழு, எம்-17 வகை உலங்குவானூர்திகள் தயாரிப்பு நிறுவனமான றொஸ்பொறோனெக்ஸ்பெட் பிரதிநிதிகளையும் சந்தித்தது.

போக்குவரத்து விமானமான அண்டனோவ்-32 தயாரிக்கும் லுங்கன்ஸ்க் தொழிற்சாலையையும் இலங்கைக் குழு பார்வையிட்ட பின்னர் கடந்த வாரம் அக்குழு கொழும்பு திரும்பியது.

யூபி பயிற்சி விமானம் உள்ளிட்ட 5 மிக்-29 விமானங்களைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் விரும்புகின்றது. ரஷ்யாவுக்கு அப்பால் பல்கேரியா, சீனா, இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தும் ஆயுதக் கொள்வனவு செய்ய அரசாங்கம் முடிபு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-5)

# மாவிலாறு வெற்றிவிழாவை கொண்டாட அரசு தீர்மானம்

(கொழும்பு)

மாவிலாறு மீதான வலிந்த படையெடுப்பின் ஓராண்டுப் பூர்த்தி ஜூலை 26 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அந்த நாளை அரசியல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தி வெற்றி விழாவாகக் கொண்டாட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிபு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நாளில் கிழக்கு மாகாணத்திலுள்ள 43 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளடங்களாக சூரிய உதயப் பகுதி அபிவிருத்தித் திட்டம் என்ற திட்டத்தையும் மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தை முதன்மைப்படுத்தி மகிந்த, நாடு தழுவிய அரசியல் பரப்புரை நடவடிக்கையை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளதாக உயர் அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கிலுள்ள 43 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களை 43 அமைச்சர்கள் ஒருங்கிணைக்கவுள்ளதாகவும் அந்த நாளில் மாவிலாறு மீதான வலிந்த தாக்குதலில் உயிரிழந்த படையினரும் கௌரவிக்கப்படவுள்ளனர் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-5)

# அல்லைப்பிட்டி படுகொலை வழக்கை விசாரிக்க மேலதிக நீதிவான் நியமனம்

(யாழ்ப்பாணம்)

தீவகம் அல்லைப்பிட்டியில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் விசாரணையை விரைவாக முடிபுறுத்துவதற்காக யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா ஊர்காவற்றுறை நீதிமன்ற மேலதிக நீதிவானாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் மே மாதம் இரவு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட 11 பேர் படுகொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணை தற்போது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இவ்வழக்கு விசாரணைகளை துரிதமாக நடத்தி முடிபுறுத்துவதற்காக நீதிச்சேவை ஆணைக்குழு, யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜாவை ஊர்காவற்றுறை நீதிமன்ற மேலதிக நீதிவானாக நியமித்துள்ளது. (ச-5)

# கொழும்புக் கடத்தல் சம்பவங்களுடன் மேற்குலக தூதரகப் பணியாளருக்குத் தொடர்பு

## ஐலண்ட் நாளிதழ் செய்தி

(கொழும்பு)

இலங்கை கடத்தல் சம்பவங்களில் மேற்குலக நாடு ஒன்றின் தூதரகப் பணியாளருக்கும் தொடர்பிருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஐலண்ட் நாளிதழ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐலண்ட் நாளிதழ் வெளியிட்ட செய்தியில் இடம்பெற்றுள்ள தகவல்கள் வருமாறு,

கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டோரில் ஒருவரான ரோஜித் தர்மரட்ண என்ற ஆனந்தவுக்கு மேற்குலக நாடு ஒன்றின் தூதரகப் பணியாளருக்கும் தொடர்பிருப்பது தெரியவந்துள்ளது.

அந்தப் பணியாளருடன் இணைந்து பாரிய விசா மோசடியில் ஈடுபட்டிருக்கின்றனர். இது தொடர்பாக விசாரணை நடத்த அந்தத் தூதரகத்திடம் பொலிஸார் ஒத்துழைப்பு கோரக் கூடும் எனத் தெரிகின்றது.

தூதரகப் பணியாளருக்கும் கடத்தல் குழுவினருக்கும் தொடர்பிருப்பதற்கான மறுக்க முடியாத ஆதாரம் உள்ளது என்று மூத்த அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய மோசடியில் அதே தூதரகத்தின் பெண் பணியாளர் ஒருவருக்கும் தொடர்பிருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகின்றது.

கடந்த ஜூன் 6 ஆம் திகதி கெரவலப்பிட்டியவில் மாசிலாமணி நேதராஜா என்ற சுரேன் கடத்தப்பட்ட சம்பவத்தில் தெமட்டகொடவில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

5 மில்லியன் ரூபாய் பணம் கேட்டு மாசிலாமணி கடத்தப்பட்டார். கணனிப் பொறியியலாளரான வதுகராஜ் செந்தில்ராஜ் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் இக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சத்திரசிகிச்சை செய்த 7 வயதுச் சாதனையாளர்

## மேற்படிப்புக்காக பல்கலைக்கழகத்தில் இணைவு

(சென்னை)

சமீபத்தில் 15 வயது தமிழக மாணவன் திலீபன்ராஜ் சிசேரியன் ஆப்பிரேசன் செய்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சாதனைக்காக உயிருடன் விளையாடியதாகப் பிரச்சினை எழுந்துள்ளது.

ஆனால் ஏழு வயதில் ஆப்பிரேசன் செய்து காட்டிய அக்ரித் ஜஸ்வால் எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றுப் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்புக்காகச் சேர்ந்துள்ளார்.

விரைவில் அமெரிக்கா செல்லவும் இருக்கிறார். சிசேரியன் அறுவைச் சிகிச்சை செய்த திலீபன்தான் இளம்வயது என்றாலும் இந்தியாவில் சிறுவயதில் ஆப்பிரேசன் செய்து சாதித்துக் காட்டியவர் அக்ரித் ஜஸ்வால்.

தற்போது இவனுக்குப் 12 வயதுதான் ஆகின்றது. குழந்தையாக இருக்கும்போதே மருத்துவ நூல்களை அக்ரித் படிக்கத் தொடங்கினான். ஆறு வயது முதலே அருகிலிருந்த டாக்டர்கள் இவனது ஆர்வத்தைக் கண்டு ஆப்பிரேசன் தியேட்டர்களில் இவனை அனுமதித்தார்கள்.

எட்டு வயதுச் சிறுமிக்கு தீக்காயத்தால் ஒட்டிப்போன இரு விரல்களை ஆப்பிரேசன் மூலம் அக்ரித் வெற்றிகரமாகப் பிரித்து மருத்துவம் செய்தான். அப்போது அவனுக்கு வயது 7.

இதனால் நோயாளிகள் பலர் இவனிடம் சிகிச்சை பெற வீடு முன் திரண்டனர். அக்ரித்தின் நுண்ணறிவு, விஞ்ஞானி ஜன்ஸ்டீனுக்கு இருந்த நுண்ணறிவை விட அதிகம். பிறந்து 10-வது மாதத்திலேயே சரளமாகப் பேசத் தொடங்கினான்.

5 வயதிலேயே ஷேக்ஸ்பியர் இலக்கியங்களை ஒப்புவிக்கத் தொடங்கினான். அவனை விட 10 வயது மூத்த மாணவர்களுக்கு பாடம் நடத்தினான். பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி.விலங்கியல் படிக்கும் அக்ரித், இந்தியாவிலேயே இளம்வயதில் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த மாணவன் என்ற பெருமையைப் பெற்றுள்ளான்.

4 மொழிகளில் பேசுகிறான். உலகிலேயே மிக அறிவான சிறுவன் என்ற பெயரையும் பெற்றுள்ளான். (ச-5)

# சீனியர்லேன் மூடப்பட்டது

யாழ்.சீனியர்லேன், தட்டாதெரு இராணுவத்தினரால் முட்கம்பி வேலி போடப்பட்டு பொதுமக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டது. நேற்றுக் குறித்த வீதிக்குச் சென்ற இராணுவத்தினரும் யாழ்.பொலிஸாரும் முட்கம்பி வேலி போட்டு அடைத்தனர். அரசடி வீதி மற்றும் தட்டாதெரு சந்தியூடாக சீனியர் லேனுக்குச் செல்லும் பொதுமக்களின் போக்குவரத்தை இராணுவத்தினர் தடை செய்தனர். (எ-5)

# வைத்தியசாலை வளவில் தங்க ஆபரணம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வளவினுள் ஒரு தங்க ஆபரணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரத்துடன் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# வேலணையில் கைது செய்யப்பட்ட பூசகரின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

வேலணைப் பகுதியில் அண்மையில் கைது செய்யப்பட்ட ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவர் மற்றும் பிரதம பூசகர் ஆகியோர் தொடர்பில் பொலிஸ் விசாரணைகளை மேற்கொள்வதற்குக் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோவில் கோபுரத்தினுள்ளே வெடிபொருள்கள் இருந்ததாகத் தெரிவித்துக் கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் இவர்கள் இருவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-3)

# மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் பேசுவது நல்லதல்ல

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

நாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் வீதியில் செல்ல அச்சப்படுகின்றனர். ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்பட்டுவருகின்றனர். ஊடக நிறுவனங்களினால் செய்திகளை வெளியிட முடியவில்லை. மனித உரிமைகள் நாட்டில் மீறப்பட்டு வருகின்றன.

இவை தொடர்பாக சர்வதேச மட்டத்தில் பேசப்படுகின்றது. இவற்றை எம்மால் தடுக்க முடியாது. இவை குறித்து சர்வதேச மட்டத்தில் பேசப்படுவது ஆரோக்கியமான விடயமல்ல. இது நாட்டைப் பிரித்து விடும் அபாயகரமான நிலைமையாகும் என்று முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஹேகாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

அரசாங்கம் இன்று அனைத்து சமூகத்தினருடனும் யுத்தம்செய்து கொண்டிருக்கின்றது. இங்கிலாந்துடன் அரசாங்கம் யுத்தப் பிரடகனம்செய்துள்ளது. எமது விடயங்களில் தலையிட வேண்டாம் என்று அரசாங்கம் இங்கிலாந்துக்கு அறிவித்துள்ளது. இவ்வாறு சர்வதேச சமூகத்தினருடன் அரசாங்கம் சிறந்த உறவைப் பேணுவதில்லை.

நாட்டில் என்ன நடக்கின்றது என்று புரியவில்லை. தமிழர்கள் வீதியில் செல்ல அச்சப்படுகின்றனர். ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். ஊடக நிறுவனங்களால் செய்திகளை வெளியிட முடியவில்லை.


மனித உரிமைகள் நாட்டில் மீறப்பட்டு வருகின்றன. இவை தொடர்பாக சர்வதேசமட்டத்தில் பேசப்படுகின்றது. இவற்றைஎம்மால்தடுக்க முடியாது. இவை தொடர்பாக சர்வதேச மட்டத்தில் பேசப்படுவது ஆரோக்கியமான விடயமல்ல. இது நாட்டைப் பிரித்துவிடும் அபாயகரமான நிலைமையாகும். எமது எதிர்காலம்கேள்விக்குறியாகும்நிலைமையே ஏற்பட்டுள்ளது என்றார். (ச-5)

# கப்பலில் தவறவிடப்பட்ட சுவர்க் கடிகாரம்

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு வந்த பயணிகள் கப்பலிலிருந்து பயணி ஒருவரின் சுவர்க் கடிகாரம் ஒன்று தவறவிடப்பட்டு அக் கடிகாரம் தெல்லிப்பழைப் பொலிஸாரால் மீட்கப்பட்டு தற்போது மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் எம்.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். குறித்த கடிகாரத்தினை உரிய ஆதாரங்களைக் காண்பித்து பெற்றுக்கொள்ளலாம் என அவர் குறிப்பிட்டார். இதேவேளை கடந்த மாதம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்ட கப்பலில் தவறவிடப்பட்ட மணவறைப்பொருள்களின் தொகுதியும் இதுவரை எவராலும் பெற்றுக்கொள்ளப்படவில்லை எனப் பதிவாளர் தெரிவித்தார். (ச-5)


காரைநகர் - புகலி

**சிவசுப்பிரமணியர் ஆலய அலங்கார உற்சவம் -2007**



**6 ஆம் நாள் உற்சவம்**

நிகழும் சர்வசித்து வருடம் ஆனித் திங்கள் 12ஆம் நாள் (26.06.2007) இன்று செவ்வாய்க்கிழமை 6-வது நாளாக அலங்கார உற்சவம் தொடர முருகன் திருவருள் கைகூடியுள்ளது.

காலை 8.00 மணிக்கு அபிஷேகம்
11.30 மணிக்கு விசேட பூசை
மாலை 4.00மணிக்கு அபிஷேகம்
5.30 மணிக்கு கலை நிகழ்ச்சி
(பயிருக்கூடல் இந்து மாமன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்கள்)
7.00மணிக்கு வசந்த மண்டப பூசை

29.06.2007 வெள்ளிக்கிழமை மாலை 6.00மணிக்கு முருகப்பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.

30.06.2007 சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு தீர்த்தோற்சவம்

உற்சவகுருக்கள்:-சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக் குருக்கள்

உற்சவ காலங்களில் அடியவர்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

சுபம்

ஆலய பரிபாலன சபையினர்

புகலி சிவசுப்பிரமணிய கோவில்,
காரைநகர்.

(C-177)

# நீரிழிவை குறைக்கும் வெந்தயம்

நம் நாட்டு மக்களில் அனேகருக்கு நீரிழிவு நோய் பெரும் ஆபத்தை விளைவித்து வருகிறது.

சத்துக்குறைவு , உணவில் நார்ப்பொருட்கள் குறைவாக இருத்தல் முதலியன நீரிழிவு ஏற்படக் காரணமாகின்றன.

நுண்கிருமி (வைரஸ்) நோய்த் தாக்குதலும் கூட நீரிழிவை சிலரிடம் உருவாக்கி வருகின்றது. பரம்பரை இயல்பும் மற்றொரு முக்கிய காரணமாக விளங்குகிறது.

கணையம் ஜீரணத்திற்குத் துணைபுரியும் உள் உறுப்பு.


இது வயிற்றின் மேல் பகுதியில் இடது புறத்தில் அமைந்திருக்கிறது.

இதில் உள்ள நுகர் அறைகளில் இருந்து இன்சுலின் உற்பத்தியாகி நேரடியாக இரத்தத்தில் கலக்கிறது. இதுதான் சர்க்கரையை ஜீரணித்து உடலை ஆரோக்கிய நிலையில் வைக்க உதவுகின்றது.

நீரிழிவு நோயாளர்கள் இரண்டு முக்கிய பிரிவினராக உள்ளனர். முதல் பிரிவினர் இன்சுலினை ஊசி வழியாக ஏற்றி வாழ்பவர்கள். இரண்டாம் பிரிவினர் வாய் வழியாக மருந்து உண்டு குணம் பெறுபவர்கள்.

எனினும் இந்த இரு பிரிவினருக்கும் மருந்தாக அமையும் வீட்டு மருந்தொன்று நிரூபணமாகி உள்ளது.

வெந்தயம் (Penugreek) நீரிழிவு நோயாளர்களின் சர்க்கரை சத்தை இரத்தத்தில்



குறைப்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இது தொடர்பாக மிருகங்களிடம் மட்டுமல்லாமல் மனிதர்களிடமும் சோதனை நடந்தது. இன்சுலினை ஊசி வழியாக செலுத்துவோரிடமும் வாய் வழியாக மருந்து உட்கொண்டு வருவோரிடமும் கூட சோதனை நடந்திருக்கிறது. அதன் பின்பு வெந்தயம் ஒரு நீரிழிவு நோயைக் குறைக்கும் மருந்தென்று முடிவு செய்யப்பட்டது.

வெந்தயத்தில் நார்ச்சத்து 20 முதல் 50% வரை அமைந்திருக்கிறது. அதனால் இதனை உரலில் போட்டு இடித்து சூரணம் செய்வதற்கு நீண்ட நேரம் பிடிக்கும் .

வெந்தயத்தில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் சூட்டைத் தணிக்கும், உடலுக்கும் குளிர்ச்சியைத் தரும்.

மலச்சிக்கலை நீக்கும். சுவையூட்டும் மணம் தரும் பொருட்களும் ஒருங்கே சேர்ந்தது வெந்தயம். லூஸிலேஜ்தான் மேலும் சபோளிர் என்ற சோப்புப்போன்ற நுரை தரும் பொருளும் இருக்கின்றது. நிக்கோடிரிக் அஸிட் எனப்படும் விற்றமின்'பி' வேறு இருப்பதால் இதன் சிறப்பு கூடுதல் அடைகின்றது.

கோலின் என்ற மருந்துச் சத்தும் மனோஸ் என்ற சுவையூட்டும் பொருளும் உள்ளன.

நீரிழிவைக் கட்டுப்படுத்த நோய்க்கேற்ப தினந்தோறும் 24 முதல் 100வரை உணவில் வெந்தயம் சேர வேண்டும். உணவுக்கு முன் இதனை தனியாக உட்கொண்டால் அதிக பயன் இருக்கும். கஞ்சி போல் காய்ச்சி உண்ணலாம்.

இரவு முழுவதும் ஊற வைத்து ஊறிய நீருடன் கடைந்து காலையில் உண்ணலாம். உணவுடன் சேர்த்தல், இட்லி, தோசை ஆகிய பலகாரம் முதலியவற்றில் போட்டு தயாரிக்கலாம் .

ரசம் செய்யலாம். வடகத்தில் சேர்க்கலாம் . தாளிக்கப் பயன்படுத்தலாம். அரிசியுடன் அல்லது ரவையுடன் சேர்த்துப் பொங்கல் செய்து சாப்பிடலாம்.

வெந்தயத்தினை உணவில் போதிய அளவு சேர்த்து உட்கொள்ளும் நோயாளர்கள் இன்சுலின் ஊசி ஏற்றிக்கொள்ளும் அளவை நாற்பது சதவீதமாக குறைத்துக் கொள்ள முடிகின்றது.

# இலங்கை தனிமைப்பட்டு தவிக்கிறது இந்தியா என்ன செய்யப் போகிறது

## மூத்த ஊடகவியலாளர் சோலை

உலக அரங்கில் இனவாத இலங்கை அரசு தனிமைப்பட்டுத் தவிக்கிறது– இந்தியா என்ன செய்யப்போகிறது? என்று தமிழ்நாட்டின் மூத்த ஊடகவியலாளரும் எம்.ஜி. ஆரின் ஆலோசகராக செயற்பட்டவருமான சோலை கேள்வி எழுப்பியுள்ளார்.

குமுதம் குழுமத்தின் 'றிப்போட்டர்' வாரமிரு முறை இதழில் சோலை எழுதியுள்ள கட்டுரையில், ஈழப் பிரச்சினையில் ராஜபக்ஷ அரசு , சர்வதேச அரங்கில் தனிமைப்படுகிறது என்பதனை ஏற்கனவே எழுதியிருந்தோம். அவை கற்பனை என்றும் கட்டுக்கதைகள் என்றும் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் மறுப்புத் தகவல் அனுப்பியிருந்தது.

இதோ! இப்போது நாம் குறிப்பிட்ட தகவல்களை விட, ஒருவர் அதிகமாகவே அடுக்கிக் கூறியிருக்கிறார். மனித உரிமை மீறல்கள் பற்றி மேற்கத்திய நாடுகள் இரட்டை நிலை எடுக்கின்றன.

இலங்கைக்குப் பணி செய்ய வரும் ஐ. நா. நிறுவனங்களில் விடுதலைப் புலிகள் ஊடுருவி விடுகிறார்கள். அவர்கள் சொல்வதைத்தான் உலகம் நம்புகிறது.

இது பாரபட்சமான செயலாகும். சர்வதேச சமூகம் எங்களை மிரட்டிப் பார்க்கிறது. எங்களுடைய பிரச்சினைகள் என்ன என்று தெரியாது அவர்கள் எங்களை மிரட்டுகிறார்கள். எங்களை அவர்கள் தனிமைப்படுத்த முடியாது. எங்களுக்குப் பின்னே சார்க் நாடுகள், ஆசிய நாடுகள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார்.

அவர் மேலும் சொல்கிறார் , பிரிட்டிஷ் வெளி யுறவுத் துறை இணை அமைச்சர் ஹிம் ஹெவல்சுக்கு முழுக்க முழுக்க தவறான தகவல்களைத் தந்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுக்கு எதிராக அவர் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. பயங்கரவாதத்திற்கு எதிராக அவர் ஒரு சொல் கூடச் சொல்லவில்லை.

அவர்கள் எங்களைத் தனிமைப்படுத்துவதாக அச்சுறுத்துகிறார்கள். உதவிகளை நிறுத்திவிட்டார்கள். எங்களைத் தொல்லை துயரங்களுக்கு ஆட்படுத்துகிறார்கள். அமெரிக்கா தாக்குதல் தொடுத்தால், அதனைப் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று உலக நாடுகள் சொல்கின்றன. ஆனால் இலங்கையில் செயல்படும் பயங்கரவாதிகளை அவர்கள் கண்டிப்பதில்லை. வேறு விதமாகப் பார்க்கிறார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அவர் வேறு யாருமல்ல. இலங்கை அரசின் பாதுகாப்புத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷதான். அவர் ஜனாதிபதி ராஜபக்ஷவின் சொந்தச் சகோதரரும் கூட. இந்த இருவரும் சேர்ந்துதான் தமிழ் இனத்தையே அழிக்கின்ற அராஜகப் போரை நடத்துகிறார்கள். அதனை உலகம் அங்கீகரிக்க வில்லை. அந்த உலகம் அவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி இருக்கிறது. எனவே, எரிச்சல் கொண்டு ஏசல்களில் இறங்கியிருக்கிறார்கள்.

'ஈழப்' பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்க என்று இந்தியா உட்பட உலக நாடுகள் இலங்கை அரசிற்கு எடுத்துச் சொல்லிவிட்டன. இதோ! அதோ! திட்டம் தயார் என்கிறார் ராஜபக்ஷ. அதிகாரப் பகிர்வு அதோ வருகிறது. இதோ வருகிறது என்றார். இப்படிச் சொல்லி ஏழு மாதங்கள் உருண்டோடிவிட்டன.

இந்த நிலையில், அரபுத் தொலைக் காட்சிக்கு அண்மையில் ராஜபக்ஷ பேட்டி அளித்தார். அதிகாரப் பகிர்வு எப்போது என்று அந்தத் தொலைக்காட்சி நிருபரும் கேட்டார். ஜனாதிபதிக்கு கோபம் கொப்பளித்தது. ஒரு பக்கம் பிரபாகரனை எதிர்த்துப் போர் நடத்துவோம். பேச்சுவார்த்தையும் நடத்துவோம் என்றார். ஓர் உண்மை தெளிவாகிறது. பேச்சுவார்த்தைக்கோ அதிகாரப்பகிர்விற்கோ இலங்கை அரசு தயாராக இல்லை. முடிந்தால் போர் நடத்திப் பார்ப்பது என்ற முடிவிற்கு வந்திருக்கிறது. அதே சமயத்தில் தமிழ் இனத்தையே அழிப்பது என்பதில் உறுதியாக இருக்கிறது. அதனால் அங்கே மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன, அழிக்கப்படுகின்றன. அதனை உலகம் இன்றைக்குத் தெளிவாகத் தெரிந்து கொண்டுவிட்டது. எனவே ஈழ மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறது. இலங்கை அரசோ பாலைவனத்தில் தனித்து விடப்பட்ட பைத்தியக்காரனைப் போல் கொதிக்கிறது.

ராஜபக்ஷ அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் என்ன செய்தார்? யாழ்ப்பாணம் செல்லும் பிரதான சாலையை மூடினார். எந்த உணவுப் பொருளும் கிடைக்காமல் பட்டினியால் பரிதவித்தனர் . விலைவாசி பயங்கரமாக உயர்ந்தது. சொந்த பூமியில் அவர்கள் அநாதைகளாக்கப்பட்டனர் . ஈழப் போராளிகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக அப்பாவித் தமிழர்கள் மீது போர் தொடுத்தனர்.

இலங்கையில் சுனாமியால் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளானது வட கிழக்குத்தான். அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள் கப்பல் கப்பலாக உதவிப் பொருட்களை அனுப்பின. ஆனால் அதில் ஒரே ஒரு பொட்டலம் கூட வடகிழக்கு மக்களுக்கு வழங்கப்படவில்லை. இது என்ன அநியாயம் என்று உதவிக்கரம் நீட்டிய நாடுகள் கேட்டன. ஈழத்திற்கு உதவுவதை சிங்கள இனவாதக்கட்சிகள் எதிர்க் கின்றன. அவற்றை மீறி எங்களால் எதுவும் செய்யமுடியவில்லை என்று தெரிவித்தனர். ஆமாம் அவர்கள் இன்று வரை ஈழத்து வெண்புறாக்களை வேட் டையாடுகிறார்கள். அதன் உயிருக்கு விடுதலை அளிக்கின்றோம் என்கிறார்கள்.

விசாரணைக்கென்று செல்லப்படும் பல நூறு தமிழ் இளைஞர்கள் வீடு திரும்பவில்லை. அவர்கள் அரசின் இனவாதக் கோரப் பசிக்குப் பலியாகிவிட்டார்கள். இந்த சோகச் செய்திகள் அனைத்தும் மனித உரிமை அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன. அந்த அமைப்புகள் ஆதாரங்களோடு ராஜபக்ஷ அரசைக் கேட்கின்றன. அதற்கு என்ன பதில் தெரியுமா அமெரிக்கா அப்படியெல்லாம் அழைத்துச் செல்லவில்லையா என்று ராஜபக்ஷவின் சகோதரர் கேட்கிறார். இப்படி அவர் இனப்படு கொலைக்கு நியாயம் கேட்கிறார்.

இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லர் என்ன செய்தான்? அவன் படையெடுத்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஆங்காங்கே யூதர்களைத் திரட்டினான் .முதலில் அவர்களைத் தொலை தூர முகாம்களுக்கு அப்புறப்படுத்தினான் .

அந்த ஈனச் செயலை இப்போது கொழும்புத்தலைநகரில் ராஜபக்ஷ செய்தார். அங்குள்ள தமிழர்களைத் திரட்டி இரவோடு இரவாக 250 கிலோமீற்றருக்கு அப்பால் வவுனியாவிற்கு அனுப்பிவைத்தனர் .இதனை உலகமே கண்டித்தது. இலங்கை எதிர்க்கட்சிகள் கண்டித்தன. ஏன்? பிறந்த மண்ணிலேயே உலவுவதற்கு தமிழர்களுக்கு உரிமை இல்லை என்கிறது இலங்கை அரசு. கண் முன்னே நடமாடுகின்ற ஒவ்வொரு தமிழனும் அந்த அரசிற்கு பிரபாகரனாகத் தெரிகிறார்கள். நடமாடும் வெடிகுண்டுகளாகத் தெரிகிறார்கள். எனவே நாட்டிற்குள்ளேயே தமிழர்களை நாடு கடத்தும் இரக்கமற்ற செயல்கள் நடைபெறுகின்றன. இதற்கு நமது பிரதமரும் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

வேட்டி கட்டிய தமிழர்களை அவர்கள் ஏன் வெறுக்கிறார்கள்? விரட்டுகிறார்கள் ?அவர்களுக்குப் பாதுகாப்பு வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும்தான் இருக்கிறது என்கிறார்களா? அவர்களுடைய ராஜ்யம் அங்கேதான் மலர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்களா?

இதுவரை தமிழர் குடியிருப்புக்களைத் தகனம் செய்தவர்கள் கொழும்புத் தமிழர்களைத் துரத்தியதன் மூலம் தங்கள் சிம்மாசனத்திற்கே நெருப்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகம் அவர்களை ஒதுக்கி வைக்க தொடங்கிவிட்டது அதனால்தான் ராஜபக்ஷாக்களும் அவரது இரத்த உறவுகளும் அசைகின்ற செடி கொடிகளைப் பார்த்துக் கூட அச்சப்படுகிறார்கள். நாம் என்ன செய்யப் போகிறோம்? இலங்கைப் பிரச்சினையில் இன்றைய உலகத்தின் சலனங்கள், அசைவுகள் இந்திய அரசிற்குத் தெரியாமலா இருக்கும்.

இலங்கைப் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க இருந்த போது உண்மையிலேயே அதிகாரப் பகிர்விற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அடுத்து வந்த சந்திரிகா சமஷ்டி ஆட்சி முறை பற்றி அறிவித்தார். ஆனால் ராஜபக்ஷ அதிகாரத்திற்கு வந்த பின்னர் அமைதிப் பேச்சுக்கு சமாதி எழுப்பப்பட்டது. தமிழ் மக்களின் நடமாடும் சுதந்திரம் கூட தட்டிப் பறிக்கப்பட்டது. அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுவதே அபாயம் என்கின்றனர். போர் முனையில் ஈழப் போராளிகளை வெற்றி காண்போம் என்கின்றனர். போர் வெறி கொளுந்து விட்டு எரிகிறது.

தரைவழிப் போரை நிறுத்தி ஈழப் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று சென்ற மாதம் இராணுவத் தளபதி கூறினார். காரணம் ஈழப்போராளிகளைக் களத்தில் நேருக்கு நேர் மோதும் ஆற்றல் படையினருக்கு இல்லை. அநியாயமாக இரத்தம் சிந்த வேண்டாம் என்று ஒரு வேளை அந்தத் தளபதி எண்ணியிருக்கக் கூடும்.

தரைவழிப் போரில் மட்டுமல்ல வான் வெளிப் போரிலும் கடற்போரிலும் ஈழப் போராளிகள் வல்லமை பெற்றிருக்கிறார்கள் என்பதனை இன்றைக்கு உலகம் கண்டு கொண்டிருக்கிறது. அத்தகைய வளர்ச்சி இந்தியாவிற்கு அபாயம். ஆகவே இந்தியா தங்களுக்கு உதவவேண்டும் என்று இலங்கை அரசு ஓலமிட்டுக் கொண்டிருக்கிறது.

என்றைக்கு ராஜபக்ஷ மணிமுடி சூட்டிக் கொண்டாரோ அன்றிலிருந்து ஈழத் தமிழர்களை மட்டுமல்ல இலங்கைத் தமிழர்களையும் தங்கள் குடி மக்களாகக் கருதியதில்லை. தமிழர்கள் மீது தொடுக்கும் தாக்குதலை பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்கின்றனர். அதனை உலகம் ஏற்கவில்லை.

இப்படி உலக அரங்கில் இலங்கை அரசு தனிமைப்பட்டுத் தவிக்கிறது. இந்தியா என்ன செய்யப்போகிறது என்று சோலை கேள்வி எழுப்பியிருக்கிறார். (அ-5)

# இன்று ஒரு தகவல்

## மூன்று வகை மனிதர்கள்

"வாழ்க்கையே வெறுத்துவிட்டது சார்" என்று சொல்லிக்கொண்டே ஒருவன் வந்தான்.

"ஏனப்பா இப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"நான் இந்த உலகத்துக்குத் தேவையே இல்லை சார்" என்றான்.

"இந்த உலகத்திலே தேவை இல்லாமல் எதுவுமே இல்லை" என்றேன் நான். அவன் என்னை நிமிர்ந்து பார்த்தான்.

"இப்பொழுது உன் உடம்பிலே இருக்கிற காலை எடுத்து விடுவோமா... அது உனக்குத் தேவையில்லை" என்றேன்.

"அது எப்படி? நடப்பதற்கு கால் வேண்டாமா?..." என்றான்.

"சரி கையை எடுத்துவிடுவோமா?" என்றேன்.

"அப்புறம் சாப்பிடுவது எப்படி? வேலை செய்வது எப்படி" என்றான்.

"சரி... அப்படியென்றால் இப்பொழுது உன் உடம்பிலே தேவை இல்லாமல் அனாவசியமாக இருக்கிற ஒரு பகுதியைச் சொல்" என்றேன்.

யோசனை பண்ணிப் பார்த்தான். "எல்லாமே அவசியமாகத்தான் தோன்றுகிறது" என்றான்.

"உனக்கு எல்லாம் அவசியம். ஆனா நீ இந்த உலகத்துக்கு அவசியமில்லை... அப்படித்தானே?" என்றேன். அவன் குழம்ப ஆரம்பித்தான்.

நிறையப்பேர் இப்படித்தான்... தன்னுடைய திறமை என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமலே இருந்து விடுகிறார்கள். அவர்கள் யார் என்பது அவர்களுக்கே அடையாளம் தெரிவதில்லை.

ஆடு, மாடுகளுக்குக்கூட அவற்றினுடைய திறமை என்ன என்பது தெரியும். அவையெல்லாம் ஆகாயத்திலே பறவைகள் மாதிரிப்பறக்க வேண்டுமென்று ஆசைப்படுவதில்லை.

சரி... ஒருத்தனுக்கு என்ன திறமை இருக்கிறது என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?

இந்த உலகத்திலே இருக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. ஒருவன் மாதிரி இன்னொருவன் இருப்பதில்லை!

ஆனாலும் உளவியல் நிபுணர்கள் மனிதனின் குணாதிசயங்களை வைத்து அவர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். அதாவது மூன்று வகை மனிதர்கள்.

சிலபேர் எப்படியென்றால்... தான் சம்பந்தப்பட்ட வேலையுடன் இருந்து விடுவதில்லை. எதிர்த்தரப்பிலே இருக்கிறவர்கள் செய்கிற வேலை...

அடுத்த பிரிவிலே இருக்கிற வேலை... எல்லாவற்றிலும் கூடத் தலையிடுவார்கள். மனோதத்துவத்திலே இதற்கு Dominance என்று பெயர்.

இப்படிப்பட்ட குணாதிசயம் உள்ளவர்கள் எதற்குப் பொருத்தம் தெரியுமா? ஒரு நிறுவனத்தைத் தலைமை தாங்கி நடத்துவது....நிர்வாகப் பொறுப்பு வகிப்பது... இவற்றுக்கெல்லாம் இவர்கள் மிகவும் பொருத்தமாக இருப்பார்கள்... அடுத்த ரகம் எப்படித் தெரியுமா?

இவர்கள் இனிமையாகப் பேசுவார்கள்.. திறமையாகப் பேசுவார்கள்... அடுத்தவர்களோடு பேசுவதற்கும் ஆசைப்படுவார்கள்... இப்படிப் பட்டவர்கள் எல்லாம் விற்பனைத் துறையிலே வேலைபார்ப்பதற்கு மிகவும் பொருத்தம்...!

மூன்றாவதுவகை மனிதர்கள் எப்படியென்றால்... இவர்களுக்கு உணர்வுபூர்வமாகச் சிந்திக்கும் தன்மை (Conscientiousness) உண்டு. உறுதியான நிலைப்பாடு (Steadiness) உண்டு.

அடுத்தவர்களோடு அதிகம் பேசமாட்டார்கள் இன்னும் சொல்லப்போனால் நாலுபேருடன் பேசுவதே இவர்களுக்குப் பிடிக்காது. செய்கிற வேலையை நுணுக்கமாகச் செய்வார்கள்.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி... அது சம்பந்தமாக எல்லா விபரங்களையும் சேகரிப்பார்கள். இந்தவகை மனிதர்களுக்கு ஆராய்ச்சிவேலை, கணக்காளர்வேலை இது மாதிரியான பொறுப்புகளைக் கொடுக்கலாம்.

ஒவ்வொரு மனிதனையுமே கொஞ்சம் கூர்ந்து கவனித்துப் பாருங்கள். அவனுக்குள்ளே இந்த மூன்று விதமான திறமைகளும் உண்டு. எது அதிகம்... எது குறைச்சல் என்பதிலே தான் வித்தியாசம்!

நாம் ஒவ்வொருவரும் கொஞ்சம் சுயமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் எந்தவகையென்று கண்டு பிடிக்க வேண்டும். இப்பொழுது சொன்ன மூன்று குணங்களுமே Personality சம்பந்தப்பட்டது அதுவும் Core Personality சம்பந்தப்பட்டது. (தொடரும்)

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## விசேட பஸ் சேவை

பொலிகண்டி கந்தவனக்கடவை கல்யாண வேலவசுவாமி கோவில் மஹோற்சவ இறுதி நாட்களில் விசேட பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கோவிலுக்குவரும் அடியார்கள் பிரயாணவசதிக்காக இன்று முதல் 30ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவம்வரை விசேட பஸ் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக கோவில் ஆதீனகர்த்தா செல்வியோ.செல்லையாபிள்ளை தெரிவித்துள்ளார். (அ)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் பவள விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியாக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையேயான ஐந்து வீரர்கள் கொண்ட நிர்ணயிக்கப்பட்ட புதிய சர்வதேச விதிகளுக்கு அமைய மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வெகுவிரைவில் வட்டுக்கோட்டையில் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## சட்டவிரோத மாட்டிறைச்சி விற்பனை

யாழ்.மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஒன்றிணைந்து நடத்திய திடீர் பரிசோதனையின் போது சட்ட விரோதமாக வெட்டப்பட்ட மாட்டிறைச்சிக் கடைகள் இரண்டில் கைப்பற்றப்பட்ட பதினான்கு கிலோ மாட்டிறைச்சியும் உரிமையாளர்களின் பூரண சம்மதத்துடன் எடுத்துச் செல்லப்பட்டு அரசாங்க மிருக வைத்தியசாலை மிருக வைத்தியரின் பரிசோதனையின் பின் அவரது சிபார்சுடன் மாட்டிறைச்சியானது நேரடியாக யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றில் சான்றுப் பொருளாக சமர்ப்பித்து உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு கௌரவ நீதிபதி அவர்களால் எடுத்துக் கொண்டபோது குற்றவாளிகள் குற்றத்தினை ஏற்றுக் கொண்டமையால் இருவருக்கும் தலா ரூபா 5000 வீதம் தண்டப் பணம் செலுத்து மாறும் இறைச்சியை இருபாலை கானான் சிறுவர் இல்லத்திற்கு வழங்குமாறும் உத்தரவிட்டு சம்பந்தப்பட்ட இறைச்சி உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டார்கள் என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்துள்ளார். (அ)

## இராசிபலன்

*26.06.2007*
*(ஆனி 12, செவ்வாய்க்கிழமை)*
*ஏகாதசி பிற்பகல் 03.30 மணிவரை*
*சுவாதி முற்பகல் 10.58 மணிவரை*
*இராகுகாலம் 2.55- 04.25 மணிவரை*
*சுபநேரம் 10.25-11.55 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

**மேடம்:-** பெரியோர் சந்திப்பு, தொழில் விருத்தி, இஷ்டசித்தி, களஸ்திர நன்மை.

**இடபம்:-** நோய்குணமடைதல், சுவாரஸ்யம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.

**மிதுனம்:-** பிரயாண இடையூறு, அஜீரண ரோகம், சொத்துப் பிணக்கு, மனச்சஞ்சலம்.

**கடகம்:-** புதிய விடயம், தனவிரயம், மாதாசுகம், மனச்சோர்வு.

**சிங்கம்:-** ஜனவசியம், உறவினர் உதவி, எடுத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி.

**கன்னி:-** செல்வாக்கு குறைவு, காரியத் தடை, மாதர்நட்பு, ரோகநிலை.

**துலாம்:-** பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம்.

**விருச்சிகம்:-** பிதாசிந்தை, மனக்குழப்பம், இடமாற்றம், வேலைச் சுமை.

**தனுசு:-** தெய்வசிந்தை, பெருமையடைதல், காரியசித்தி, விருந்துபசாரம்.

**மகரம்:-** ஆலோசனை, பிறர் உதவி, காரிய அனுகூலம், புதிய சிந்தை.

**கும்பம்:-** தேசாந்திரவாசம், ஆன்றோர் ஆசி, வீண்பயம், உடல்நலக் குறைவு.

**மீனம்:-** வீண் தொல்லை, எதிர்பாராத அச்சம், முயற்சி தடங்கல், பணக் குறைவு.

-வளவன்

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

**பதினொராம் திருவிழா**

### நாவலர்கள் புகழ் நயினை நகரும் வாழி

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய மும்மறமும் தழைத்து வாழி
பாவார் வெண் ணீறு பஞ்சாட் சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ் நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியும் வாழி வாழி

ஸ்ரீலஸ்ரீ ம.அமரசிங்கப் புலவர்

### சூலம் எடுப்பவளே

கடலலைகள் கதை பேச
கனிவுடனே ஆட்சி செய்பவளே
நயினையின் நாயகியே
வேண்டும் வரம் தந்திடம்மா

சூலம் எடுத்து வரும் சுந்தரியே
ஆயிரம் கண்ணுடையே ஈஸ்வரியே
வேண்டும் வரம் நீ தரவேண்டும்
சாந்தி சமாதானம் நிலைத்திடவே

ஆர்.மதி, சண்டிலிப்பாய் வடக்கு

### துன்பத்தை நீக்கி இன்பத்தை தர

மணிபல்லவத்தில் ஆனிமாத மஹோற்சவம்
மகாராணியே உன் விழாக் கோலம்
நயினை எனும் புனித நகரிலே
நாகம் குடை பிடித்து நிழல்தர
நாகபூசணி அருள் பாலிக்க
நான்கு பக்கம் நீர் ஓடா
நமக்கு வரும் இன்னல்களை தீர்த்து
நாகபூஷணியே அருளை தாரும் அம்மா

க.கெங்காதரன், அச்சுவேலி

### நாகபூஷணி அம்மா உன் தாள் பணிந்தேன்...

பாமாலை புனைந்தேற்றி தோத்திரம் பாடி -அம்மா
நேரிற் கண்டிற்ற பரவசம் பெற்றேன்

வருடாந்த மஹோற்சவத்தை புகழ்ந்துபாடி -தாயே
நயினாதீவில் நடந்திடும் விழாவைக் கண்டேன்

வீதியெங்கும் அம்மா நீ வருகையிலே
உனது பக்தருடன் பக்தராக கலந்து நின்றேன்

கருடன் வாசலிலே வெற்றித் திலகமிடவே -அம்மா
உனை வணங்கி உன் அருளைப் பெற்றிட்டேன்

கௌசிகன்

### மனம் இரங்கியேனும் அருளாயோ !

வையகமெல்லாம் சக்தி வடிவமாகி
வலம்வரும் நயினை நாகபூஷணித்தாயே !
கங்கைக்கெல்லாம் காரணமாகி
கங்கையில் கோயில் கொண்டவளே !
எம் சிந்தைகள் எல்லாம் சிதைவடைந்து
எம் சிறப்பெல்லாம் பொலிவிழந்து
மந்தைகள் போல் வாழுகின்றோம்
மனம் இரங்கியேனும் அருளாயோ !

கோபாலசிங்கம் சதீஸ், கரவெட்டி

### அருள் நல்கிடம்மா

செந்தமிழர் வாழ்வில்
வந்த துயர் போகட்டும்
நந்தவன வாழ்வை
நயினைத் தாய் தந்திடம்மா
நொந்தழுது நாமிருக்க
நெஞ்சில் ஈரம் கொள்வாய்
நாமுனைத் தான் தொழுவோம்
நல்கிடம்மா நின் அருளை

கி.அ.தில்லைதாசன்

தர்மம், ஒருபோதும் ஏழையாக்கியதில்லை; பதுக்கல், ஒருபோதும் பணக்காரனாக்கியதில்லை; செழுமை, ஒருபோதும் அறிவாளியாக்கியதில்லை.

–இங்கிலாந்து

வலம்புரி

# யாழில் பொருள் விலையேற்றம் தடுக்க உரிய நடவடிக்கை தேவை

அத்தியாவசிய பொருள்கள் யாழ்.குடாநாட்டில் தாராளமாகவிருப்பதாக, அரச ஊடகங்கள் பிரசாரம் செய்கின்ற போதிலும், பொருள்களின் விலையேற்றத்தால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பங்கீட்டு அட்டைக்குப் பொருள்களை விநியோகித்து வந்தபோது, பொருள் தட்டுப்பாடு இருந்த போதிலும் பொருள்களின் விலையில் ஓர் நிதானம் கடைப்பிடிக்கப்பட்டது.

ஆனால் தனியார் வர்த்தக சங்கங்கள் பொருள்களைத் தாராளமாக எடுத்து வரத் தொடங்கிய பின்னர் பொருள்களுக்கான தட்டுப்பாடு ஓரளவு நீங்கிய போதிலும் அவற்றின் விலை பன்மடங்காக அதிகரித்துள்ளது.

அரசின் விலையேற்றம் என்பதற்கப்பால் கப்பல் கட்டணம் மற்றும் வர்த்தகர்கள் நினைத்தபாட்டில் செய்து கொள்ளும் 'விலைகூட்டல்' என்பவற்றினால் பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

குறிப்பாக ஒரு கிலோ கறுப்பரிசியின் விலை நூற்றிப்பத்து ரூபாயாகவுள்ளதெனில் சாதாரண மக்களின் வாழ்க்கை எவ்வாறு அமையும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுதவிர தேவையான அளவு கோதுமை மாவைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கோதுமை மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் தனியார் வர்த்தகர்கள் கோதுமை மாவை மட்டுப்படுத்தி விற்பனை செய்வதிலும் - விலை அதிகரிப்பதிலுமே கண்ணும் கருத்துமாகவுள்ளனர்.

இதனால் கோதுமை மாவிற்கும் அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. ஒட்டு மொத்தத்தில் அரிசி, கோதுமை மா என்பவற்றின் விலை அதிகரிப்பினால் குடாநாட்டு மக்கள் பெரும் கஷ்டங் களை எதிர்நோக்கியுள்ளனர்.

அதேவேளை குழந்தைகள், சிறுவர்களுக்கான பால்மா மற்றும் உப ஆகாரம் என்பவற்றின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் குழந்தைகளுக்கான பால்மா மற்றும் உப உணவுகளைச் சீராகப் பெற்றுக் கொடுப்பதில் ஏற்பட்ட இடர்பாடுகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தனியார் வர்த்தகர்கள் மிகக் கூடிய விலையில் பொருள்களை விற்பனை செய்கின்றனர்.

எனவே இது விடயத்தில் உரிய அதிகாரிகள் தலையிட்டு நீதியான, நியாயமான விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அப்போதுதான் விலையுயர்வின் தாக்கத்திலிருந்து ஏழை மக்களைப் பாதுகாக்க முடியும்.

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 35 வெளிமாவட்ட மாணவர்கள் தெரிவு

(கொழும்பு)

2007 ஆம் வருடத்தில் கற்கை நெறியைத் தொடருவதற்காக வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 35 மாணவர்கள் தெரிசெய்யப்பட்டுள்ளனர் என்று கல்லூரியின் பிரதம ஆணையாளர் கே.முகம்மட் தம்பி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு திருமலை, மட்டக்களப்பு,அம்பாறை ஆகிய கிழக்கு மாகாணமாவட்டங்களிலிருந்து நடனம், சங்கீதம், சித்திரம், நடனமும் அழகியலும், விசேட கல்வி, ஆங்கிலம், ஆங்கிலம் மூலம் விஞ்ஞானம் மற்றும் நூலக விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளை இவ்வாண்டில் தொடர்வதற்காக 21 மாணவர்களும் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், புத்தளம்,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து 14 மாணவர்களுமாக 35 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக அங்கு சென்று கற்கை நெறிகளைத் தொடர முடியாதுள்ளதாகவும் மாற்று வழிகளை ஏற்படுத்தித் தருமாறும் கல்வி அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்ததை கருத்தில் கொண்டும் இக் கற்றைநெறிகள் போதிக்கப்படும் ஏனைய கல்வியியற் கல்லூரிகளில் காணப்படும் இட வசதியைக் கவனத்தில் கொண்டு இம் மாணவர்கள் 35 பேருக்கும் சிகேன தர்காநகர், பஸ்துண்ட ரட, அட்டாளைச்சேனை நில்வளவ ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக பிரதம ஆணையாளர் குறிப்பிட்டார்.(ச–5)

# சமாதானத்திற்கான சர்வமத தலைவர்களின் மாநாடு கொழும்பில்

(கொழும்பு)

சமாதானத்திற்கான சர்வமதத் தலைவர்களின் மாநாடொன்றை தேசிய சமாதானப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது. இச் சமாதானத்திற்கான மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டின் பிரதம அதிதியாகச் சமாதானத்திற்கான உலக சம்மேளனத்தின் இயக்குநர் கியூசி சுகினோர் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சமாதானத்திற்கான உலக சம்மேளனம் சர்வதேச ரீதியாக 150 நாடுகளில் உள்நாட்டு முரண்பாடுகளைத் தீர்க்கும் விடயத்தில் தமது பணிகளை மேற்கொண்டு வருவதாக இலங்கைத் தேசிய சமாதானப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இச் சம்மேளனத்தின் இயக்குநர் கியூசி சுகினோர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பில் சமயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் சந்திக்கவுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–3)

# நாடாளுமன்றக் கணக்காய்வுக் குழுவினால் நிதிமோசடி குறித்து விசாரணை ஆரம்பம்

நாடாளுமன்ற கணக்காய்வுக்குழு நாட்டின் பலபகுதிகளிலுமுள்ள நிதி நிறுவனங்களில் பாரிய அளவிலான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாகக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிதி நிறுவனங்களிலுள்ள நிதிமோசடி குறித்து ஆராயும் நோக்கில் இவ்விசாரணைகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நிதி நிறுவனங்களில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுக் கணக்காய்வு நாயகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாகத் தமது விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என குழுவின் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இறுதியாக நாடாளுமன்றக் கணக்காய்வுக் குழு மேற்கொண்ட இது போன்ற விசாரணைகளில் 38 ஆயிரம் கோடி ரூபா நிதிமோசடிகள் நிதி நிறுவனங்களில் இடம்பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.(ச–3,5)

# யாழ்.வணிகர் கழகத்தில் கோழித் தீவன விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கோழித் தீவனங்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கோழித் தீவனங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையடுத்து அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க கோழித் தீவனங்கள் எடுத்து வரப்பட்டதாக வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

குஞ்சுத் தீவனம்,வளரும் குஞ்சுத் தீவனம், முட்டைபோடும் கோழிகளுக்கான தீவனம், புறொயிலர் குஞ்சுத்தீவனம் மற்றும் புறொயிலர் கோழித் தீவனம் என்பனவே வணிகர் கழகத்தினால் கப்பல்மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இத் தீவனங்களைப் பெற விரும்பும் கோழி வளர்ப்போர் வடமாகாணப் பிராந்திய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி அமிர்தலிங்கத்தின் சிபார்சுக் கடிதத்துடன் வந்து யாழ்.வணிகர் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# தென்மராட்சியில் மூவரை காணவில்லை என முறைப்பாடு

தென்மராட்சியில் மூவர் காணாமல் போயுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீசாலை சோலை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த இருவரும் மந்துவிலைச் சேர்ந்த ஒருவருமே காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீசாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவந்தன் (வயது–27), வடிவேல் ரவீந்திரன் (வயது–32), ஆகிய இருவருமே கடந்த 23 ஆம் திகதி காணாமல் போயுள்ளனர். இவர்கள் இருவரும் தென்மராட்சி தபாலகத்துக்கு அண்மையிலுள்ள இராணுவ முகாமுக்கு விசாரணைக்குச் சென்றுவிட்டு வேலைக்குச் சென்றபோது காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட மந்துவிலைச் சேர்ந்த நவரட்ணம் கேதீஸ்வரன் (வயது–21) என்பவர் கடந்த 16 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவரது தந்தை, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார். கொடிகாமம் இராணுவ முகாமுக்குச் சென்று திரும்பும் வழியிலேயே அவர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வல்வெட்டித்துறையில் இளைஞன் கடத்தல்

வல்வெட்டித்துறை ஊரணியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளதாக அவரது தயாரால் யாழ்.மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

சூசைதாஸன் அன்ரனிதாஸன் என்பவரே கடத்தப்பட்டுள்ளார். அவர் மன்னாரிலிருந்து தொழில் நிமிர்த்தம் வல்வெட்டித்துறையில் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# பல்துறைசார் மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்.போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை மற்றும் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கம் ஆகியவை இணைந்து நடாத்தும் பல்துறைசார் இலவச மருத்துவம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் காலை 8 மணிதொடக்கம் நண்பகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் சத்திரகிசிச்சை மருத்துவம், பெண்நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல், புற்றுநோயியல், கண்நோயியல், சயரோகம் மற்றும் சருமநோயியல் சார் மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவர்.

அத்துடன் ஆய்வுகூடப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். இதில் மக்கள் கலந்து வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் எனப் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## தடை செய்யப்பட்ட ஊசி மருந்தை விற்பனை செய்வதற்குத் தடை

இலங்கை ஒப்பனைச் சாதனங்கள் உபாயங்கள் ஔடதங்கள் அதிகார சபையினால் டயக்லோபெனக் சோடியம்(Diclofenac Sodium injection)எனக் கூறப்படுகின்ற சகல வகையான ஊசி மருந்துகளை இறக்குமதி, விற்பனை, பாவனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே இவ்வூசி மருந்துகள் கைவசம் உள்ளவர்கள் இவற்றை நோயாளர்களுக்கு விற்பனை செய்ய வேண்டாம் எனவும் அவற்றை நோயாளர்களுக்குப் பாவிக்க வேண்டாம் எனவும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதனை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (ச)

## மஹாபொல பரிசளிப்பு வைபவம்

2005/2006 ஆம் கல்வியாண்டுக்கான யாழ்.பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மஹாபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் பரிசளிப்பு வைபவம் ஜூலை முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஆகவே 2005/2006 ஆம் கல்வியாண்டுக்கு சகல பீடத்திலிருந்தும் இப் புலமைப் பரிசில் பெறுவதற்குத் தகுதியான சகல மாணவர்களையும் மேற்படி வைபவத்தில் கலந்து கொண்டு புலமைப் பரிசில் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு அரச அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார்.

மாணவர்களுக்கான அழைப்புக் கடிதங்களை யாழ்.பல்கலைக்கழக நலன்புரிக் கிளையின் உதவிப் பதிவாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## பரிசளிப்பு விழா

உலகப் போதை எதிர்ப்புத்தினத்தை முன்னிட்டு அஸ்றியா, கியூடெக் - கரித்தாஸ் ஆகிய நிறுவனங்களால் 'மனிதம் மலர மதுவை ஒழிப்போம்' என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட ஓவிய, கட்டுரைப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கு கியூடெக் - கரித்தாஸ் ஜெபா மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் கௌரவ விருந்தினராக கியூடெக்–கரித்தாஸ் இயக்குநர் அருட்பணி கி.யோ. ஜெயக்குமாரும் கலந்து கொள்கின்றனர். (ச)

# ரணில் பொதுக்கூட்டணி அமைத்தால் ஜே.வி.பி.இணைந்து கொள்ளாது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி பொதுவான கூட்டணி ஒன்றை அமைத்தால் அந்த கூட்டணியில் ஜே.வி.பி.ஒருபோதும் இணைந்து கொள்ளாது. ஐக்கிய தேசிய கட்சியினதும் எமது கட்சியினதும் கொள்கைகள் முற்றிலும் வேறுபட்டவையாகும் என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.


இதேவேளை முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர எம்முடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் இதுவரை எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை. எதிர்காலத்தில் மங்கள சமரவீர எமது கட்சியுடன் இணைந்து செயற்படுவாரா? என்பது குறித்து தற்போதைக்கு எதுவும் கூறமுடியாது என்றும் அவர் கூறினார்.

ஜே.வி.பி.உட்பட அனைத்துக் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பொது அமைப்பை உருவாக்க முன்வர வேண்டுமென்று ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது; முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் ஸ்ரீபதி சூரியாராட்சி ஆகியோர் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டனர்.

இதனையடுத்து நாட்டில் அரசியலில் சில மாற்றங்கள் ஏற்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந் நிலையில் மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியாராட்சி மற்றும் ஜே.வி.பியினர் உட்பட சிறுபான்மைக் கட்சிகள், ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்துகொண்டு பொது கூட்டணியை உருவாக்கவேண்டுமென்று ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.சிறுபான்மைக் கட்சிகளை இணைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக்கட்சி கூட்டணி அமைக்கலாம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கும் கூட்டணியில் ஜே.வி.பி. இணைந்து கொள்வதற்கான சாத்தியமே இல்லை என்றே கூறவேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சியினதும் ஜே.வி.பியினதும் கொள்கைகள் முற்றிலும் வேறுபட்டவையாகும். எனவே எம்மால் ஒன்றாக இணைந்து ஒருபோதும் செயற்படமுடியாது. எதிர்காலத்தில் மங்கள சமரவீர எமது கட்சியுடன் இணைந்து செயற்படுவாரா என்பது குறித்து தற்போதைக்கு எதுவும் கூறமுடியாது. காரணம் எதிர்காலத்தில் மங்கள சமரவீரவுடன் சில பேச்சுவார்த்தைகளும் இடம் பெறலாம். (ச-5)




இணைத் தலைமை நாடுகளின் மென்போக்குக்கு எதிராக நோர்வேத் தமிழர்கள் நேற்று மேற்கொண்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

## நெடுந்தீவில் புதிய ராடர் கண்காணிப்பு நிலையம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் புதிய கண்காணிப்பு நிலையத்தை அமைக்கும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நெடுந்தீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது கடற்படையினரின் கண்காணிப்பு நிலையம் மற்றும் ராடர்களும் அழிக்கப்பட்டன.

இந் நிலைமையில் மீண்டும் புதிய ஒரு ராடர் நிலையம் மற்றும் கண்காணிப்பு நிலையத்தையும் அமைக்கும் செயற்பாட்டில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

இதன் மூலம் கடலில் கண்காணிக்கப்படுவதுடன் ஆகாயத்திலும் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கடற்படையினர் அப் பகுதியில் உள்ள மக்கள் கடற்படை முகாமுக்கு அண்மையாக நடமாடினால் அவர்களை விசாரணைக்குட்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவல் சபைக்கு எதிராக தாக்

லர் சபைதலைவரின் பொறுப்பில் நடைபெறுவதாகவும் அறங்காவலர் சபையின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஓரே வாரத்தில்...

கடந்த யூன் 13 ஆம் திகதி மட்டக்களப்பு கிரானில் துணை இராணுவக்குழுவான கருணாகுழுவினரின் இரு பிரிவினரிடையே இடம் பெற்ற ஆயுத மோதலில் மூவர் காயமடைந்தனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## எரிபொருட்களின்...

டீசலில் மட்டும் 700 மில்லியன் ரூபாய், பெற்றோலில் 140 மில்லியன் ரூபாய்,மண்ணெண்ணெயில் 340 மில்லியன் ரூபாயென மொத்தம் ஒரு பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.ஆகையால் விலைகளை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றார் அவர். (ச-5)

## அரசாங்கத்துடன்...

இவ்வாறு இணைந்து கொள்ளவிரும்பும் 11 பேரின் பட்டியல் தம் வசம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். இவர்கள் அனைவரும் அரசுடன் இணைவது குறித்து பேச்சுக்கள் இடம் பெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது. (ச-3)

## முன்னாள்...

12 பேர் அடங்கிய கும் பலை பொது மக்கள் வழிமறித்தனர்.

அப்போது அக் கும்பல் கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டது. இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மூன்று பேர் இறந்ததாகவும் மேலும் நான்கு பேர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-3)

## 'எம்' இல்...

மங்கள அன் கோ-வின ருக்கும் ஏற்படும்.

மங்களவுடனான பிரச்சினைக்கு தீர்வு காண மகிந்த தயாராக இருக்கிறார். மங்களவிற்கு நீர்ப்பாசன அமைச்சு பதவி வழங்கவும் மகிந்த ஒப்புக்கொண்டார். ஆனால் முன்னர் வகித்த வெளிவிவகார அமைச்சுத் தான் வேண்டுமென்று மங்கள பிடிவாதம் செய்தார்.

மங்கள வலியுறுத்தியதனை மகிந்த ஏற்றிருந்தால் இப்போது அரசாங்கத்தில் இடம் பெற்றிருப்பார். அதேபோல் எந்த ஒரு கட்சியில் இருந்தும் வெளியேறி புதிய கட்சி தொடங்கியவர்களுக்கு எதிர்காலம் இல்லை.

அவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியிலோ அல்லது சுதந்திரக்கட்சியுடன் தான் இணைய வேண்டும். லலித் அணிக்கு நேர்ந்தது என்ன? அரைவாசிப்பேர் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சென்றனர். அரைவாசிப் பேர் காலமாகிப் போயினர் என்றார் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே. (ச-5)

## இலங்கை...

கும்பலாக பலர் நிற்பதைப் பார்த்தனர்.

அவ்விடத்திற்குச் சென்று பார்த்தபோது குழுமியிருந்தவர்கள் அகதிகள் என்பதும் இலங்கைக்கு செல்வதற்கான படகின் வருகைக்காக அவர்கள் காத்திருந்ததும் தெரிய வந்தது. மேலும் விசாரணை நடத்தியதில் அரக்கோணம் தர்மபுரி நாமக்கல் முகாமில் இருந்து வந்த ஏழு குடும்பங்களைச் சேர்ந்த ஏழு ஆண்கள், ஏழு பெண்கள், ஏழு குழந்தைகள் ஆகிய 21 பேர் என தெரிய வந்தது.(ச-5)

## இணைத் தலைமைகள்...

பௌச்சர்,, யப்பானின் விசேட சமாதான தூதுவர் யசூசி அகாசி , ஐரோப்பிய ஒன்றியத்தின் பணிப்பாளர் நாயகம் அன்ரஸ் மிற்ரலஸ்,ஐரோப்பிய ஆணைக் குழுவின் தலைவர் ஜேம்ஸ் மோறன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகங்களான கோபி அனான் ,பூட்ரஸ் பூட்ரஸ் ஹாலி உள்ளிட்ட அனைத்துலக சமாதான முன்னெடுப்

தலைமைநாடுகளுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளனர். இக் கூட்டத்தில் வட அயர்லாந்து அமைதி முயற்சிகளின் அனுசரணையாளராக பணி யாற்றிய அமெரிக்காவின் செனட்டர் ஜோய் மிற்ரல் சேல் மற்றும் உலகில் நடைபெற்ற அமைதி முயற்சிகளில் பங்கு பற்றிய முக்கிய அமைதிப் பணிப்பேச்சாளர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

அவர்கள் தாங்கள் பங்குபற்றிய அமைதி முயற்சிகளில் ஏற்பட்ட வெற்றி தோல்வி

சமாதானத் தூதுவா ஜோன் ஹான்சன் பௌயா உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

# நெடுந்தீவில் புதிய ராடர் கண்காணிப்பு நிலையம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் புதிய கண்காணிப்பு நிலையத்தை அமைக்கும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நெடுந்தீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது கடற்படையினரின் கண்காணிப்பு நிலையம் மற்றும் ராடர்களும் அழிக்கப்பட்டன.

இந் நிலைமையில் மீண்டும் புதிய ஒரு ராடர் நிலையம் மற்றும் கண்காணிப்பு நிலையத்தையும் அமைக்கும் செயற்பாட்டில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

இதன் மூலம் கடலில் கண்காணிக்கப்படுவதுடன் ஆகாயத்திலும் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கடற்படையினர் அப் பகுதியில் உள்ள மக்கள் கடற்படை முகாமுக்கு அண்மையாக நடமாடினால் அவர்களை விசாரணைக்குட்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவல் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 2004 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் இம் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் ஆலய 'நடவடிக்கைகள் அனைத்தும் அறங்காவலர் சபைதலைவரின் பொறுப்பில் நடைபெறுவதாகவும் அறங்காவலர் சபையின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு இதுவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு இடைக்கால தடை உத்தரவு விலக்கிக் கொள்ளப்படவில்லை யென தெரியவருகிறது. (அ)


## யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## கணக்காளர் தேவை

மேற்படி எமது சங்கத்திற்கு முன் அனுபவமுள்ள கணக்காளர் தேவை.

வயதெல்லை 50-65

சங்கத்திலிருந்து 4Km இற்கு உள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முன்னர் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளித்தோரும் சமுகமளிக்கலாம்.

உரிய ஆவணங்களுடன் 27.06.2007 புதன் கிழமை காலை 11 மணிக்கு சங்கத்திற்கு நேரடியாக சமுகம் தரவும்.

*-செயலாளர்*

559,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி-194)


காரணம் எதிர்காலத்தில் மங்கள சமரவீரவுடன் சில பேச்சுவார்த்தைகளும் இடம் பெறலாம். (ச-5)

## இலங்கை...

கும்பலாக பலர் நிற்பதைப் பார்த்தனர்.

அவ்விடத்திற்குச் சென்று பார்த்தபோது குழுமியிருந்தவர்கள் அகதிகள் என்பதும் இலங்கைக்கு செல்வதற்கான படகின் வருகைக்காக அவர்கள் காத்திருந்ததும் தெரிய வந்தது. மேலும் விசாரணை நடத்தியதில் அரக்கோணம் தர்மபுரி நாமக்கல் முகாமில் இருந்து வந்த ஏழு குடும்பங்களைச் சேர்ந்த ஏழு ஆண்கள், ஏழு பெண்கள், ஏழு குழந்தைகள் ஆகிய 21 பேர் என தெரிய வந்தது. (ச-5)

னர் வகித்த வெளிவிவகார அமைச்சுத் தான் வேண்டுமென்று மங்கள பிடிவாதம் செய்தார்.

மங்கள வலியுறுத்தியதனை மகிந்த ஏற்றிருந்தால் இப்போது அரசாங்கத்தில் இடம் பெற்றிருப்பார். அதேபோல் எந்த ஒரு கட்சியில் இருந்தும் வெளியேறி புதிய கட்சி தொடங்கியவர்களுக்கு எதிர்காலம் இல்லை.

அவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியிலோ அல்லது சுதந்திரக்கட்சியுடன் தான் இணைய வேண்டும். லலித் அணிக்கு நேர்ந்தது என்ன? அரைவாசிப்பேர் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சென்றனர். அரைவாசிப் பேர் காலமாகிப் போயினர் என்றார் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே. (ச-5)

## இணைத் தலைமைகள்...

பௌச்சர்,, யப்பானின் விசேட சமாதான தூதுவர் யசூசி அகாசி , ஐரோப்பிய ஒன்றியத்தின் பணிப்பாளர் நாயகம் அன்ரஸ் மிற்ரலஸ், ஐரோப்பிய ஆணைக் குழுவின் தலைவர் ஜேம்ஸ் மோறன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகங்களான கோபி அனான் ,பூட்ரஸ் பூட்ரஸ் ஹாலி உள்ளிட்ட அனைத்துலக சமாதான முன்னெடுப்பாளர்களும் ஒஸ்லோ சென்றுள்ளனர்.

தமது முன்னைய அமைதி நடவடிக்கைகளின் அனுபவங்களை அனைத்துலக சமாதான முன்னெடுப்பாளர்கள் இணைத் தலைமைநாடுகளுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளனர். இக் கூட்டத்தில் வட அயர்லாந்து அமைதி முயற்சிகளின் அனுசரணையாளராக பணி யாற்றிய அமெரிக்காவின் செனட்டர் ஜோய் மிற்றல் சேல் மற்றும் உலகில் நடைபெற்ற அமைதி முயற்சிகளில் பங்கு பற்றிய முக்கிய அமைதிப் பணிப்பேச்சாளர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

அவர்கள் தாங்கள் பங்குபற்றிய அமைதி முயற்சிகளில் ஏற்பட்ட வெற்றி தோல்வி தொடர்பான தமது அணுகுமுறைகள், நுட்பங்கள் போன்றவற்றை ஒப்பீடு செய்யவுள்ளதாக ஒஸ்லோ தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-3)

## நோர்வே வெளிவிவகார அமைச்சின்...

ஒஸ்லோவில் நடைபெறுகின்ற இணைத் தலைமை நாடுகளின் மாநாட்டினையொட்டி நோர்வேத் தமிழ் மக்களால் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று நடாத்தப்பட்டது. நோர்வே வெளிவிவகார அமைச்சின் முன்பாக நேற்று முற்பகல் 10 மணி முதல் முற்பகல் 11 மணிவரை இக் கவனயீர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டது.

அமெரிக்கா ,ஐரோப்பிய ஒன்றியம் ,யப்பான் மற்றும் நோர்வே ஆகிய இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் இரு நாள் மாநாடு நேற்றும் இன்றும் நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் தலைமையில் ஒஸ்லோவில் நடைபெறுகின்றது.

தமிழ் மக்கள் மீது வன்போர் நடவடிக்கைகளையும் கொடும் பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்துவிட்டு வரும் இலங்கை அரசு தொடர்பாக இணைத் தலைமை நாடுகள் கடைப்பிடிக்கும் மென்போக்கு அணுகுமுறை மீதான புலம்பெயர் தமிழர்களின் அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் முகமாக நோர்வே தமிழ் அமைப்புக்களின் ஒன்றியத்தினால் மேற்படி கவனயீர்ப்பு ஒன்றுகூடல் ஒழுங்கு செய்யப்பட்டது. ஒன்றுகூடலின் முடிபில் இலங்கைக்கான சிறப்பு சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் ஊடாக இணைத் தலைமை நாடுகளுக்கு கோரிக்கை மனு கையளிக்கப்பட்டது.

தமிழ் பெண்கள் அமைப்பின் பிரதிநிதி சுமதி விஜயராஜ் இம் மனுவை கையளித்தார். அதில் தமிழர்கள் மீது இன அழிப்பு யுத்தத்தினையும் பெரும் மனித உரிமை மீறல்களையும் கட்டவிழ்த்து விட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் மீது இணைத் தலைமை நாடுகள் இறுக்கமான நிபந்தனைகளையும் அழுத்தங்களையும் பிரயோகிக்க வேண்டும்.

நிதி உதவியை நிறுத்த வேண்டும். தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகள், இடப் பெயர்வு அவலங்கள், ஆட்கடத்தல், காணாமல் போதல் மனித உரிமை மீறல்கள் ஆகிய அரச பயங்கரவாத நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு நீதியா்ன சமாதானத்திற்கு வழியேற்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. நோர்வேத் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் இருந்து கோரிக்கை மனுவைப் பெற்றுக் கொண்ட ஜோன் ஹான்சன் பௌயர் தமிழ் மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

இலங்கைத் தீவின் இன்றைய நெருக்கடிகள் , அதிகரித்து வரும் வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், பொருளாதார நெருக்கடிகள் தமக்கு கவலையளிக்கின்றன என்று தெரிவித்த ஜோன்ஹான்சன் பௌயர் அதே கவலை இணைத்தலைமை நாடுகளுக்கும் உண்டு என்று தெரிவித்தார்.

தமிழ் மக்களினுடைய வேண்டுகையை தாம் கவனத்தில் எடுப்பதாகவும் இணைத்தலைமை நாடுகளிடம் எடுத்துக்கூறுவதாகவும் தமது உரையில் அவர் தெரிவித்தார். (எ-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.